பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
18 01 2025 7 15
சனிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பிரதமர் திரு நரேந்திர மோடி, ஸ்வாமித்வா திட்டத்தின்கீழ் 65 லட்சம் சொத்து அட்டைகளை காணொலிக் காட்சி மூலம் இன்று வழங்குகிறார்.

2. நாட்டின் வாகன தொழில்துறை ஏற்றுமதி அடுத்த சில ஆண்டுகளில் 100 பில்லியன் டாலர் என்ற அளவை எட்டும் என மத்திய வர்த்தகத்துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

3. தில்லி சட்டப்பேரவைத் தேர்தலுக்கு தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனுக்கள் பரிசீலனை இன்று நடைபெறுகிறது.

4. காஸா பகுதியில் ஹமாஸ் அமைப்புடனான போர்நிறுத்த ஒப்பந்தத்திற்கு இஸ்ரேல் அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

5. இந்திய ஓபன் பேட்மிண்டன் போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் ராங்கி ரெட்டி - சிராக் ஷெட்டி இணை அரை இறுதிக்குத் தகுதி பெற்றுள்ளது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

<<<<>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி, ஸ்வாமித்வா திட்டத்தின்கீழ் 65 லட்சம் சொத்து அட்டைகளை காணொலிக் காட்சி மூலம் இன்று வழங்குகிறார்.

பஞ்சாயத்ராஜ் அமைச்சகத்தால் செயல்படுத்தப்படும் இத்திட்டத்தின்கீழ், ட்ரோன்கள் மூலம் நில அளவுகள் கணக்கீடு செய்யப்பட்டு அதன் உரிமையாளர்களுக்கு சட்டப்பூர்வமாக சொத்து அட்டைகள் வழங்கப்படுகின்றன.

இன்று நடைபெறும் நிகழ்ச்சியில் குஜராத், உத்தரப்பிரதேசம், மத்தியப்பிரதேசம் உள்ளிட்ட 10 மாநிலங்கள் மற்றும் இரண்டு யூனியன்பிரதேசங்களைச் சேர்ந்த 50 ஆயிரம் கிராமங்களைச் சேர்ந்த நில உரிமையாளர்களுக்கு பிரதமர் சொத்து அட்டைகளை வழங்க உள்ளார்.

இத்திட்டத்தின் பயனாளிகளுடன் பிரதமர் கலந்துரையாட உள்ளார்.

<<<<>>>>

லட்சத் தீவில் சுற்றுலா வாய்ப்புகள் தொடர்ந்து அதிகரித்து வருவதாக குடியரசு துணைத்தலைவர் திரு ஜெக்தீப் தன்கர் தெரிவித்துள்ளார்.

லட்சத்தீவில் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை நேற்று அவர் தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் பேசிய அவர், இது சிறிய தீவாக இருந்தாலும், பன்முகத்தன்மையை எடுத்துரைப்பதாக அவர் கூறினார்.

<<<<>>>>

நாட்டின் வாகன தொழில்துறை ஏற்றுமதி அடுத்த சில ஆண்டுகளில் 100 பில்லியன் டாலர் என்ற அளவை எட்டும் என மத்திய வர்த்தகத்துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

தில்லியில் நடைபெற்று வரும் வாகன தொழில்துறை கண்காட்சியில் உதிரி பாகங்கள் உற்பத்தி தொடர்பான அமர்வில் பங்கேற்றுப் பேசிய அவர், பல்வேறு நாடுகளுடனான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம், வாகன தொழில்துறையின் வளர்ச்சிக்கு பெரிதும் உதவும் என்றார்.

நாட்டின் மின்சார வாகன சந்தை விரிவடைந்து வருவதாகவும் திரு. பியூஷ் கோயல் கூறினார்.

<<<>>>

தில்லி சட்டப்பேரவைத் தேர்தலுக்குத் தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனுக்கள் இன்று பரிசீலிக்கப்படுகின்றன.

70 தொகுதிகளை கொண்ட தில்லி சட்டப்பேரவைத் தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் நேற்றுடன் நிறைவடைந்த நிலையில் மொத்தம் ஆயிரத்து 497 பேர் மனுக்களைத் தாக்கல் செய்துள்ளனர்.

மனுக்களைத் திரும்ப பெற வரும் திங்கள் கிழமை கடைசிநாளாகும்.

வாக்குப் பதிவு அடுத்த மாதம் 5-ம் தேதியும் வாக்கு எண்ணிக்கை அடுத்த மாதம் 8-ம் தேதியும் நடைபெறவுள்ளது.

இதனிடையே முக்கிய அரசியல் கட்சிகளான பிஜேபி, ஆம் ஆத்மி, காங்கிரஸ் உள்ளிட்டவை பிரச்சாரத்தை தீவிரப்படுத்தியுள்ளன.

பிஜேபி மூத்த தலைவர்கள் திரு அனுராக் சிங் தாக்கூர், திரு பன்சூரி ஸ்வராஜ் உள்ளிட்டோர் நகரின் பல்வேறு பகுதிகளில் நேற்று பிரச்சாரம் மேற்கொண்டனர்.

ஆம் ஆத்மியின் மூத்த தலைவரும் பஞ்சாப் முதலமைச்சருமான பகவந்த் மான் நேற்று பல்வேறு இடங்களில் பிரச்சாரம் மேற்கொண்டார்.

தில்லி காங்கிரஸ் தலைவர் திரு தேவேந்திர யாதவ் உள்ளிட்டோர் அக்கட்சி வேட்பாளர்களுக்கு ஆதரவாக தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்னர்.

இந்நிலையில் தில்லி தேர்தலுக்கான தேர்தல் அறிக்கையை பிஜேபியின் தேசிய தலைவரும் மத்திய அமைச்சருமான திரு ஜேபி நட்டா நேற்று புதுதில்லியில் வெளியிட்டார்.

தில்லியில் பிஜேபி வெற்றி பெற்றால் பெண்களுக்கு மாதம் 2 ஆயிரத்து 500 ரூபாய் உதவித் தொகை வழங்கப்படும், குறைந்த விலையில் சமையலல் எரிவாயு சிலிண்டர்கள் வழங்கப்படும், கர்ப்பிணிப் பெண்களுக்கு 21 ஆயிரம் ரூபாய் உதவித் தொகை வழங்கப்படும், முதியோர் ஓய்வூதியம் உயர்த்தி வழங்கப்படும் என்பன உள்ளிட்ட பல்வேறு வாக்குறுதிகள் அக்கட்யின் தேர்தல் அறிக்கையில் இடம்பெற்றுள்ளன.

<<<>>>

வேளாண் உற்பத்தி மற்றும் கிராமப்புற நுகர்வு அதிகரித்துள்ளதால் நாட்டின் பொருளாதாரம் மேலும் வலுவடையும் என ரிசர்வ் வங்கியின் மாதாந்திர அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரிசர்வ் வங்கியின் துணை கவர்னர் திரு மைக்கேல் தேபபிரதா பத்ரா தலைமையிலான குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் கிராமப்புற தேவைகள் தொடர்ந்து அதிகரித்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

உள்கட்டமைப்பில் வளர்ச்சி அதிகரித்துள்ளதாகவும் அதிக கூறப்பட்டுள்ளது.

டிசம்பரில் தொடர்ந்து இரண்டாவது மாதமாக முதன்மைப் பணவீக்கம் குறைந்துள்ளது என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<>>>

ஜம்மு-காஷ்மீரின் ரஜௌரி மாவட்டததில் ஏற்பட்ட மர்ம நோய் காரணமாக கடந்த சில நாட்களில் 16 பேர் உயிரிழந்துள்ளனர்.

இது தொடர்பாக அந்த யூனியன்பிரதேச முதலமைச்சர் திரு ஒமர் அப்துல்லா தலைமையில் நேற்று உயர் நிலைக் கூட்டம் நடைபெற்றது,

இந்த நோய் தொடர்பான விசாரணையை விரைவுபடுத்துமாறு சுகாதாரத்துறையினருக்கு முதலமைச்சர் உத்தரவிட்டார்.

இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அனைத்துத் துறைகளும் ஒத்துழைக்க வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

<<<<>>>>

சமூக சேவை நடவடிக்கைகளில் தேசிய மாணவப் படையினரின் பங்களிப்பு அளப்பரியது என்று பாதுகாப்புத்துறைச் செயலாளர் திரு ராஜேஷ் குமார் சிங் கூறியுள்ளார்.

புதுதில்லியில் என்சிசி குடியரசு தின முகாமை நேற்று அவர் பார்வையிட்டார்.

அப்போது பேசிய அவர், தேசத்தின் பெருமைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நிகழ்ச்சிகளில் தேசிய மாணவர் படையினரின் செயல்திறன் சிறப்பு வாய்ந்தது என்று குறிப்பிட்டார்.

<<<<>>>>

உத்தரப்பிரதேச மாநிலம் பிரயாக்ராஜில் நடைபெற்று வரும் மகா கும்பமேளாவில் மத்திய அரசின் திட்டங்களை மக்களுக்கு கொண்டு செல்லும் வகையில் பல்வேறு அமைச்சகங்கள் தங்கள் அரங்குகளை அமைத்துள்ளன.

கண்காட்சி பகுதியில் அமைக்கப்பட்டுள்ள இந்த அரங்குகள், அரசுத் திட்டங்களை விரிவாக எடுத்துரைக்கின்றன.

தகவல் ஒலிபரப்பு அமைச்சகத்தின் அரங்கில் பல்வேறு திட்டங்கள் குறித்து விரிவான விளக்கங்கள் இடம்பெற்றுள்ளன.

பேரிடர் மேலாண்மை துறை சார்பில் அமைக்கப்பட்டுள்ள அரங்கில் வெள்ள மேலாண்மை, காற்றுத் தீ தடுப்பு உள்ளிட்டவை தொடர்பான விழிப்புணர்வு தகவல்கள் இடம்பெற்றுள்ளன.

திறன் மேம்பாட்டு அமைச்சகத்தின் அரங்கில் பிரதமரின் தொழிற்பழகுநர் திட்டம் தொடர்பான டிஜிட்டல் கண்காட்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வேளாண் அமைச்சகம் அமைத்துள்ள அரங்கில் சிறுதானியங்களின் நன்மைகள் குறித்து விரிவாக விளக்கப்பட்டுள்ளது.

சிறுதானியங்களும், இயற்கை சாகுபடி முறையிலான காய்கறி விதைகளும் இந்த அரங்கில் வைக்கப்பட்டுள்ளன.

ஜல்சக்தி அமைச்சகத்தின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள அரங்கில் தூய்மை கங்கை இயக்கத்தின் செயல்பாடுகள் குறித்து விரிவான விளக்கங்கள் இடம்பெற்றுள்ளன.

இந்த அரங்குகளை ஒவ்வொரு நாளும் பல்லாயிரக்கணக்கான் மக்கள் பார்வையிட்டு பயனடைந்து வருவதாக அரசு கூறியுள்ளது.

இந்த கண்காட்சி அரங்க வளாகம் பிப்ரவரி 26ஆம் தேதி வரை பொதுமக்களின் பார்வைக்காக திறந்திருக்கும் என மத்திய அரசு தெரிவித்துள்ளது.

<<<<>>>>

மகாராஷ்டிர மாநிலம் நாசிக்கில் 2027-ம் ஆண்டில் நடைபெறவுள்ள சிம்ஹஸ்தா கும்பமேளாவுக்கான ஏற்பாடுகள் குறித்து மும்பையில் மகராராஷ்டிர முதலமைச்சர் திரு தேவேந்திர ஃபட்னவிஸ் தலைமையில் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

12 ஆண்டுகளுக்கு ஒருமுறை நாசிக்கில் நடைபெறும் இந்த விழாவுக்கான போக்குவரத்து ஏற்பாடுகள், கூட்ட மேலாண்மை, தங்குமிட வசதிகள், நதிகள் தூய்மை, அடிப்படை வசதிகளை மேம்படுத்துவது உள்ளிட்டவை குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

நாசிக் நகரத்தை மகாராஷ்டிராவின் முக்கிய நகரங்களுடன் இணைக்கும் சாலைகளை மேம்படுத்துவது குறித்து முதலமைச்சர் ஆலோனை நடத்தினார்.

பிரயாக்ராஜ் கும்பமேளா போல் சிறப்பான ஏற்பாடுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளை திரு தேவேந்திர ஃபட்னவிஸ் கேட்டுக்கொண்டார்.

<<<<>>>>

நாட்டில் கடந்த 10 ஆண்டுகளில் வானிலை முன்னறிவிப்பில் துல்லியம் அதிகரித்துள்ளது என மத்திய புவி அறிவியல் துறை இணையமைச்சர் திரு. ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

சிம்லா வானிலை ஆய்வு மையத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அவர், புதிதாக தொடங்கப்பட்டுள்ள வானிலை இயக்கம், வானிலை தொடர்பான சேவைகளில் பெரிய புரட்சியை ஏற்படுத்தும் என்றார்.

வானிலை ஆய்வுத்துறை தொடர்ந்து நவீன தொழில்நுட்பங்களை ஏற்று செயல்படுத்தி வருவதாக அவர் கூறினார்.

இதன்மூலம் துல்லியம் அதிகரித்து, பொதுமக்களின் உயிர்களும், சொத்துகளும் பாதுகாக்கப்படுவதாக திரு. ஜிதேந்தி சிங் தெரிவித்தார்.

<<<<>>>>

சிங்கப்பூர் அரசுடன் ஒடிசா மாநில அரசு எட்டு புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளது.

திறன் மேம்பாடு, பசுமை எரிசக்தி, தொழில்துறை பூங்காக்கள் மேம்பாடு உள்ளிட்டவற்றில் இந்த ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளன.

ஒடிசா சென்றுள்ள சிங்கப்பூர் அதிபர் திரு தர்மன் சண்முகரத்தினம், அம்மாநில முதலமைச்சர் திரு மோகன் சரண் மாஜி ஆகியோர் முன்னிலையில் புவனேஸ்வரில் இந்த புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டன.

புவனேஸ்வரில் உள்ள உலகத் திறன் மையத்தை சிங்கப்பூர் அதிபர் நேற்று பார்வையிட்டார்.

ரகுராஜ்பூரில் உள்ள பாரம்பரிய கிராமம், கோனார்க்கில் உள்ள சூரியனார் கோயில், புவனேஸ்வரின் அந்தருவாவில் உள்ள தடுப்பூசி உற்பத்தி ஆலை ஆகியவற்றுக்கு திரு சண்முகரத்தினம் இன்று செல்லவுள்ளார்.

<<<<>>>>

பஞ்சாப், ஹரியானா, ராஜஸ்தான் மற்றும் சண்டிகரின் பல பகுதிகளில் இரவு மற்றும் அதிகாலை நேரங்களில் தொடர்ந்து கடும் பனி நீடிக்கும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

ஹிமாச்சலப் பிரதேசம், உத்தராகண்ட், மேற்கு வங்கம், ஒடிசா, மத்தியப் பிரதேசம் மற்றும் வடகிழக்கு மாநிலங்களில் அடுத்த சில நாட்களுக்கு கடும் பனி மூட்டம் நிலவும் எனவும் அந்த மையம் கூறியுள்ளது.

தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் சில இடங்களில் மழை பெய்யக்கூடும் என்றும் அந்த மையம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

ஹமாஸ் இயக்கத்துடனான போர்நிறுத்த ஒப்பந்தத்திற்கு இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.

ஒப்பந்தத்தில் இழுபறி நீடிப்பதாக தகவல் வெளியான நிலையில் நேற்று மாலை பாதுகாப்பு விவகாரங்களுக்கான இஸ்ரேல் அமைச்சரவைக் குழு இதற்கான ஒப்புதலை வழங்கியது.

பிணைக் கைதிகளை ஹமாஸ் அமைப்பு விடுவிப்பது, காஸா பகுதியில் இருந்து இஸ்ரேல் படைகளை விலக்கிக்கொள்வது உள்ளிட்ட அம்சங்கள் இந்த ஒப்பந்தத்தில் இடம்பெற்றுள்ளன.

கத்தார், அமெரிக்கா, எகிப்து ஆகிய நாடுகளின் முன்முயற்சியில் இந்த போர்நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

இதையடுத்து காசா பகுதியில் தாக்குதல்கள் முடிவுக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**<<<<>>>>**

இந்திய ஓபன் பேட்மிண்டன் போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் ராங்கி ரெட்டி - சிராக் ஷெட்டி இணை அரை இறுதிக்குத் தகுதி பெற்றுள்ளது.

தில்லியில் நடைபெற்று வரும் இப்போட்டியில் நேற்று நடைபெற்ற காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை தென்கொரியாவின் ஜின் யாங் - கான்மின் இணையை 21-10, 21-17 என்ற செட் கணக்கில் வென்றது.

**<<<<The End>>>>**